DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C. No. 216/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-7 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி. தேவி(காவல் ஆய்வாளர்) |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused absent. u.s 355 BNSS petition filed and allowed.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 17.02.2026

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது விருதுநகர் மாவட்டம் கூமாப்பட்டி காவலநிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 03.12.2021 தேதி ஆர்எஸ் மங்கல காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது ஆர்எஸ் மங்கல காவல் நிலைய CSR மனு எண் 369/2021 பார்வையிட்டு நிலைய குற்ற எண். 289/2021 u/s 341,294(b),506(i) IPC and 4 of TNPHW ACT கீழ் வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.

2. பின்னர் அன்றைய தினமே 15.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் நாகேஸ்வரன், அசோக் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகசர், வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வைமகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. வரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடுசெய்யப்படுகிறது. பின்னர் சாட்சிகள் கையொப்பம் பெறப்பட்டது. சம்பவயிட சாட்சிகள் தமிழ்செல்வி, சசிகுமார், முருகானந்தம், சுப்ரமணியன், பாலமுருகன் ஆகியோர்களை விசாரித்து தனி தனியே வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

3. இவ்வழக்கின் எதிரி தலைமறைவாக சென்று பின் இராமநாதபுரம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் 07.12.2021 தேதி முன்பிணை பெற்றதால் அவர் மீது கைது நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

4.இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது u/s 341,294(b),506(i) IPC and 4 of TNPHW ACT கீழ குற்ற இறுதியறிக்கை தாக்கல்செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சம்பவம் 28.11.2021 தேதி இரவு சுமார் 9.40 மணியளவில் நடைபெற்றதாக சொல்லப்படுகிறது என்றால் சரிதான். சம்பவத்தை குறித்த தகவலானது எங்களுக்கு 03.12.2021 தேதி என்றால் சரியல்ல. 01.12.2021 தேதி 18.30 மணி யளவில் சம்பவத்தை குறித்த தகவல் கிடைத்து CSR பதிவுசெய்யப்பட்டுவிட்டது. அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையில் சம்பவத்தை குறித்த தகவலானது 03.12.2021 தேதி மதியம் 14.00 மணிக்கு கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். CSR யை பார்வையிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த நேரத்தை குறிப்பிட்டுள்ளோம். அ.சா.ஆ.1 புகார் மனுவில் சம்பவம் நடைபெற்ற இடத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரின் வீட்டின் முன்பு என குறிப்பிடப்பட்டுள்ளது.

2. அ.சா.ஆ.5 மாதி ரி வரைபடத்தில் வபரமக்குடி – வரவேணி ரோட்டில் வைத்து சம்பவம் நடைபெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரரின் வீடு அந்த இடத்தில் தான் உள்ளது. புகார் மனு, முதல் தகவல்அறிக்கையில் சம்பவத்தை

கண்ணுற்ற சாட்சிகளின் பெயர் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சிலர் விலக்கிவிட்டதாக சொல்லப்பட்டுள்ளது விசாரணையில் அவர்கள் யார் என்று தெரிந்துகொண்டோம். மேற்படி விலக்கிவிட்ட நபர்களின் விவரத்தை எப்படி தெரிந்து கொண்டோம் என்றால் புகார்தாரர் மற்றும் அ.சா.2 யை விசாரணை செய்ததில் தெரிந்துகொண்டோம். எதிரிக்கும் புகார்தாரருக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்தது என்றால் சரிதான்.

3.புகார்தாரர் புகாரில் தெரிவித்துள்ளவாறு வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும் முன்விரோதம் காரணமாக எதிரி மீது கொடுத்த பொய் புகாரை சரிவர விசாரணை செய்யாமல் வழக்கு பதிவுசெய்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால்ச ரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.